1981 மே 8]

திரு. எல். இளையபெருமாள் : வைகை ஆற்றில் விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படுமா என்பது கேள்வி. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இப்படி நடந்து கொள்வது வழக்கம் அல்ல.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்ற விவாதங்களைக்கூட நீங்கள் அவைக் குறிப்பிலே ஏற்றாமல் இருக்க வேண்டும். இது தவறான முன் மாதிரியாக இருக்கலாம். கேள்வி நேரத்திலே ஒரு அமைச்சர் என்ன பதில் சொல்கிறாரோ அதுதான் பதிலே தவிர, இப்படித் தான் சொல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. இரண்டாவது முறையும் அவர் சொல்லியிருக்கிறார் எனவே இதுவே முன் மாதிரியாக இருக்குமானால், ஒவ்வொரு கேள்வி பதில் நேரத்திலும் சம்பந்தம் இல்லாத சில கேள்விகள் எழ வாய்ப் பேற்படும் என்ற காரணத்தினாலே, அதை முதலிலே அவைக்குறிப் பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் சொல்வது தான் பதில் என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அது ரூலிங்கிலே வந்து விட்டது. கேள்வி நேரத்திலே இந்த மாதிரி வாதங்களை எழுப்பக் கூடாது.

ஆறுகளில் பாயும் மழைக்கால வெள்ளம் வீணாவதைத் தடுக்கும் திட்டம்

* வினா எண். 956—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக ஆறுகளில் பாயும் மழைக்கால வெள்ளம் கடலில் கலந்து வீணாவதைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) இல்லையெனில் பொறியாளர் (Engineers) களின் குழு ஒன்று அமைத்து ஆலோசனை செய்யப்படுமா?

(இ) உண்டெனில் என்னென்ன திட்டங்கள் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ), (ஆ) மற்றும் (இ) :

* விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம்

* வினா எண். 957—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

[*118—ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம் பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இந்த வேலை துவங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : உடையார்பாளையம் வட்டம், பொன்னாறு வாய்க்கால் தலைப்பை சீர்திருத்தும் திட்டம் ஏதும் இல்லை. இந்த வாய்க் காலை சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது என்று பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

[முற்பகல் 9.50]

திரு. கு. ரமணி : நான் நீண்ட நேரமாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற கேள்வி களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அந்த பதிலுக்குப் பிறகு மேற்கொண்டு விளக்கங்கள் அல்லது மேலும் தகவல்கள் பெறுவதற்கு உறுப்பினர்கள் விரும்பினால், அதைச் சட்டப்படி வேறு வகைகளில் கேட்கலாமே தவிர, சரியான பதில் வரவில்லை, அந்த பதில் இப்படி வந்திருக்கவேண்டும் என்று அமைச்சரை வற்புறுத்துவதற்கு வழியில்லை. மாண்புமிகு உறுப் பினர்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு விளக்கங்கள் அந்த பதிலில் இல்லாவிட்டால் அந்த விளக்கங்களைப் பெறுவதற்கு வேறு முறை யான நடவடிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு அமைச்சர் அளித்த பதில் சரி யான பதிலாக, போதுமானதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். மாண்புமிகு அமைச்சர் இப்படித்தான் பதில் சொல்லவேண்டும் என்று நான் கட்டாயப் படுத்த முடியாது. மாண்புமிகு அமைச்சர் பதிலே சொல்ல வில்லையென்றாலும் நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 மே 8]

Thiru K. RAMANI : I have not asked the Hon. Deputy Speaker to compel the Hon. Minister to reply. The Hon. Minister is bound to give a reply. According to our rules, the Hon Minister is bound to give a proper reply to the question put.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே இது குறித்து தீர்ப்புச் சொல்லிவிட்டேன். அந்தக் கேள்வி முடிந்து அடுத்த கேள்விக்குப் போய், அதற்கும் பதில் சொல்லியாகி விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளிலேயே கேள்வி நேரம் என்பது முக்கியமான ஒரு நேரமாகும். பல தகவல்கள் பெறுவதற்கும், தேவையான விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்கும் இது ஒரு முக்கியமான நேரமாகும். மேலும், இங்கே வருகின்ற வினாக்கள் போடப்பெற்று, நீண்ட நாட்கள் சென்ற பின்னரே, அதற்கான பதில்கள் இங்கே வருவதால், மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்கு விரும்புகிறார்கள். அப்படி விளக்கங்கள் கேட்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கான விளக்கங்களைத் தர இயலவில்லை என்றால், விவரங்கள் தற்போது இல்லை, பின்னர் சேகரித்துத் தருகிறேன் என்று சொல்லலாம். அது உறுப்பினர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கும். அது சம்பந்தமான முறையில் மாண்புமிகு அமைச்சர்கள் பேசினால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டனர். இப்படித்தான் அவர் பதில் சொல்லவேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர்பார்ப்பது சரியல்ல. இது ஒரு நல்ல முன்மாதிரி இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையை இத்தோடு முடிக்கிறேன்.

வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம்

* வினா எண். 958—**திரு. ந. குலசேகர பாண்டியன்**: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?